## சுருக்கம்

மாநிலத் திட்டம் – ஊரகப் பகுதிகளில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பழுதடைந்த 51,821 வீடுகளை பழுது நீக்கம் செய்ய அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா அதி–1) துறை

அரசாணை(நிலை) எண். 42

நாள்: 26 .02.2021
சார்வரி மாசி 14–ந்தேதி
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.141, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (SGS1)துறை, நாள் 26.09.2018.

மேலும் படிக்க:–

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கடிதம் எண்.3823/2020/ RHS2.1 நாள்:15.02.2021.

**ஆணை:–**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஊரகப் பகுதிகளில் அரசுத் திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு பழுதடைந்த வீடுகளை, ஒரு வீட்டிற்கு ரூ.50,000/–க்கு மிகாமல் 45,594 வீடுகளை பழுது நீக்கம் செய்ய 2018–2019 ஆம் ஆண்டில் ரூ227.97 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட அரசாணையைத் தொடர்ந்து அரசின் நிதி உதவியுடன் பயனாளிகளால் வீடுகள் பழுது நீக்கம் செய்யப்பட்டு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது எனவும், பழுது நீக்கம் செய்து முடிக்கப்பட்ட 45,594 வீடுகள் தவிர, மீதமுள்ள பழுதடைந்த வீடுகள் உள்ளதாக மாவட்டங்களில் கண்டறியப்பட்டு அதற்கான கருத்துருக்கள் மாவட்டங்களிலிருந்து வரப்பெற்றுள்ளன என்றும் அத்தகைய பழுதடைந்த வீடுகளை பழுது நீக்கம் செய்து தரக்கோரி பயனாளிகளிடமிருந்து மாவட்டங்களுக்கும், இவ்வியக்ககத்திற்கும் மனுக்கள் வரப்பெறுகின்றன என்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், அரசு திட்டங்களின் மூலம் கட்டப்பட்டு, பழுதடைந்த இவ்வீடுகளை, பயனாளிகள் தங்கள் சொந்த நிதியிலிருந்து பராமரிக்கவோ அல்லது புதிய வீடுகள் கட்டவோ போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால், ஏழை பயனாளிகளால் வீடுகளை பராமரிக்க இயலாத நிலை உள்ளது என்றும் 25 ஆண்டுகளுக்கு முன்னதாக கட்டப்பட்ட வீடுகளை, தொடர்ந்து பராமரிப்பு செய்யாமல் இருக்கும் பட்சத்தில், இவ்வீடுகளில் மேலும் அதிகமான பழுது ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், அரசினால் கட்டிக் கொடுக்கப்பட்டு பழுதடைந்த இவ்வீடுகளை பழுது நீக்கம் செய்து கொடுத்தால், மேலும் பல ஆண்டுகளுக்கு இவ்வீடுகள் ஸ்திர தன்மையுடன் இருக்கும் எனவும், பயனாளிகளின் ஏழ்மை நிலையினைக் கருத்திற் கொண்டும், அரசு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வீடுகளை தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும் என்ற நோக்கிலும், மக்களின் பாதுகாப்பினை முன்னிட்டும், பழுதடைந்த வீடுகளை அரசினால் பராமரிப்பு செய்து தர வேண்டியது அத்தியாவசியமாகும் எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. 'அரசுத் திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகளை பழுதுநீக்கம் செய்தல்'திட்டத்தில் ஏற்கனவே அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்கியது போல் தற்போது கண்டறியப்பட்டுள்ள 51,821 பழுதடைந்த வீடுகளை, வீடு ஒன்றிற்கு ரூ.50,000/–க்கு மிகாமல் பழுது நீக்கம் செய்ய அனுமதி மற்றும் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தன்னுடைய கடிதத்தில் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்:

| | |
|---|---|
| மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின்படி பழுது நீக்கம் செய்யப்பட வேண்டிய மொத்த வீடுகளின் எண்ணிக்கை மற்றும் நிதி ( 51821 × ரூ.50,000 வீதம்) | 51,821 வீடுகள்<br>ரூ. 25910.50 இலட்சம் |
| தற்போது இருப்பில் உள்ள நிதி | : ரூ.2295.00 இலட்சம் |
| தேவைப்படும் கூடுதல் நிதி | : ரூ.23615.50 இலட்சம் |

எனவே, மாவட்டங்களிலிருந்து வரப்பெற்ற முன்மொழிவுகளின் அடிப்படையில் 51,821 வீடுகளை பழுது நீக்கம் செய்வதற்கு தேவைப்படும் நிதி ரூ.23615.50 இலட்சத்தினை ஒதுக்கீடு செய்து, அதற்கான உரிய உத்திரவினை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனைச் செய்து, அதனை ஏற்றுக் கொள்ள முடிவு செய்து, மாவட்டங்களில் அரசு திட்டங்களின் கீழ் 25 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள, இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 51,821 வீடுகளை, ஒரு வீட்டிற்கு ரூ.50,000/– மிகாமல் பழுதுநீக்கம் செய்ய அனுமதியும், அதற்கு தேவைப்படும் நிதி ரூ.25910.50 இலட்சத்தில், தற்போது இருப்பில் உள்ள ரூ.2295.00 இலட்சம் போக, மீதம் ரூ.23615.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதியும், ரூ.12955.22 இலட்சத்திற்கு 2020–21 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்படும் :–

2216 வீட்டு வசதி – 03 ஊரக வீட்டு வசதி – 789 ஆதிதிராவிடர்களுக்கான சிறப்பு கூறுகள் திட்டம் – மாநில செலவினங்கள் –JF –தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான வீடு பழுது பார்ப்பதற்கான திட்டம் – 311 உதவித்தொகை – 01 தனிப்பட்ட மானியம்.

த தொகு 2216 03 789 JF 311 01 ரூ. 37,57,01,000/–

2216 வீட்டு வசதி – 03 ஊரக வீட்டு வசதி – 796 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டம் – மாநில செலவினங்கள்–JE– பழங்குடியினருக்கான வீடு பழுது பார்ப்பதற்கான திட்டம் – 311 உதவித்தொகை – 01 தனிப்பட்ட மானியம்

ததொகு 2216 03 796 JE 311 01 ரூ. 1,29,54,000/–

2216 வீட்டு வசதி – 03 ஊரக வீட்டு வசதி – 800 ஏனைய செலவு – மாநில செலவினங்கள்–JI – இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வீடு பழுது பார்ப்பதற்கான திட்டம் – 311 உதவித்தொகை – 01 தனிப்பட்ட மானியம்

ததொகு 2216 03 800 JI 311 01

ரூ. 90,68,67,000/–

---

மொத்தம் ரூ. 129,55,22,000/–

---

7. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் வரும் 2020–21 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும். அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் அவர்களுக்கு அனுமதி அளித்து ஆணையிடப்படுகின்றது. இதுகுறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவரும் பொருட்டு, இவ்வாண்டின் இறுதி துணை மதிப்பீட்டில் (Final Supplementary Estmates) குறிப்பிட்டு சேர்த்திடல் வேண்டும் 2020–2021 ஆம் ஆண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித்துறைக்கு அனுப்பிடும் பொழுது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பிடுமாறும் மேலும் இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதி (வரவு செலவு பொது–1) துறைக்கு அனுப்புமாறு ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளித்து ஆணையிடப்படுகிறது.

9. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.11248/(ஊ.வ)/2021, நாள்.26.02.2021–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்:
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–600 015.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னையை தவிர)
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக)
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வாயிலாக)
மாநில தலைமை கணக்காயர், சென்னை 9/18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.

<u>நகல்:–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி (ம) சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ) துறை, சென்னை– 9.
தேசிய தகவல் மையம், சென்னை–9.
இருப்பு கோப்பு /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/2/2021.
பிரிவு அலுவலர்.
26.2.2021

இணைப்பு

| வ. எண் | மாவட்டம் | மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட பிரேரணையின்படி பழுதுநீக்கம் செய்ய வேண்டிய | |
|---|---|---|---|
| | | வீடுகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் லட்சத்தில்) |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | அரியலூர் | 2195 | 1097.50 |
| 2 | கோயம்புத்தூர் | 1067 | 533.50 |
| 3 | கடலூர் | 2913 | 1456.50 |
| 4 | செங்கல்பட்டு | 994 | 497.00 |
| 5 | தர்மபுரி | 968 | 484.00 |
| 6 | திண்டுக்கல் | 309 | 154.50 |
| 7 | ஈரோடு | 2375 | 1187.50 |
| 8 | கள்ளக்குறிச்சி | 1802 | 901.00 |
| 9 | காஞ்சிபுரம் | 753 | 376.50 |
| 10 | கன்னியாகுமரி | 2 | 1.00 |
| 11 | கரூர் | 1960 | 980.00 |
| 12 | கிருஷ்ணகிரி | 2477 | 1238.50 |
| 13 | மதுரை | 1754 | 877.00 |
| 14 | நாகப்பட்டினம் | 729 | 364.50 |
| 15 | நாமக்கல் | 1589 | 794.50 |
| 16 | பெரம்பலூர் | 575 | 287.50 |
| 17 | புதுக்கோட்டை | 4047 | 2023.50 |
| 18 | இராமநாதபுரம் | 190 | 95.00 |
| 19 | இராணிப்பேட்டை | 8 | 4.00 |
| 20 | சேலம் | 1884 | 942.00 |
| 21 | சிவகங்கை | 272 | 136.00 |
| 22 | தஞ்சாவூர் | 2240 | 1120.00 |
| 23 | நீலகிரி | 535 | 267.50 |
| 24 | தேனி | 757 | 378.50 |
| 25 | தென்காசி | 489 | 244.50 |
| 26 | தூத்துக்குடி | 353 | 176.50 |
| 27 | திருச்சிராப்பள்ளி | 703 | 351.50 |
| 28 | திருநெல்வேலி | 158 | 79.00 |
| 29 | திருப்பத்தூர் | 190 | 95.00 |
| 30 | திருப்பூர் | 781 | 390.50 |
| 31 | திருவள்ளூர் | 2066 | 1033.00 |
| 32 | திருவண்ணாமலை | 7473 | 3736.50 |
| 33 | திருவாரூர் | 3170 | 1585.00 |
| 34 | விழுப்புரம் | 3354 | 1677.00 |
| 35 | விருதுநகர் | 689 | 344.50 |
| | **மொத்தம்** | **51821** | **25910.50** |

**ஹன்ஸ் ராஜ் வர்மா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

26/2/2021

பிரிவு அலுவலர்

26-2-2021